# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2428/02 - 2025 මාර්තු මස 17 වැනි සඳුදා - 2025.03.17

*2428/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச்சட்டத்தின் 76அ பிரிவின்படி உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு வெளியிடப்படுகின்ற தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய பிரச்சார வரம்புகள்**

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 76அ பிரிவின்படி 2025.05.06 ஆம் திகதி நடைபெறும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களும் பிரச்சார நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய, தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் பிரச்சார வரம்புகள் பற்றிய கட்டளைகள் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளன.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2025, மாச்சு 11.

### அட்டவணை 01

2025.05.06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துதல் தொடர்பான பின்வரும் கட்டளைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்படுகின்றன.

**பிரச்சார முறைகளும் கூட்டங்களும்**

1. பொது இடங்களில் வேட்பாளர் ஊக்குவிப்புக்கான விளம்பரங்கள், பிரச்சாரப் பலகைகள், சுவரொட்டிகள், பெரியளவிலான உருவப்படங்கள், கொடிகள், பதாகைகள், சோடினைகள், சித்திரங்கள், நிழற்படங்கள், தேர்தல் சின்னங்கள்/வேட்பாளர்களின் பெயர்கள், தனிவேறான ஊக்கொலிகள் என்பவற்றை வெளிக்காட்டி வைத்திருத்தலும் வேட்பாளர்களை/கட்சிகளை ஊக்குவிக்கும் விதத்திலான ஆடைகளும் தொப்பிகளும் தடைசெய்யப்பட்டுள்ளது.

2. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் கட்சிகள்/குழுக்கள் மற்றும் வேட்பாளர் ஊக்குவிப்புக்காக தேசியக் கொடிகள், மதக் கொடிகள், மத அடையாளங்கள் என்பவற்றை வெளிக்காட்டி வைத்திருக்கலாகாது.

3. பொதுமக்களுக்கு இடைஞ்சலாக அமையாத விதத்தில் ஆகக்கூடியது ஐவரை (05) மாத்திரம் உள்ளடக்கிய குழுவினருடன் வீட்டுக்கு வீடு சென்று மாத்திரம் துண்டுப்பிரசுரங்களைப் பகிர்ந்தளிக்கலாம் என்றபோதும், அத்தகைய பிரசுரங்களை வெளிக்காட்டலாகாது. எப்பொழுதும் துண்டுப்பிரசுரங்களை அச்சிட்ட அச்சகத்தின் முகவரி, வெளியீட்டாளரின் தகவல்கள் ஆகிய விபரங்கள் அப்பிரசுரத்தில் அச்சிடப்பட்டிருப்பது வலுக் கட்டாயமானதாகும்.

4. தேர்தலில் போட்டியிடும் கட்சியொன்றுக்கு/குழுவொன்றுக்கு வேட்பாளரொருவருக்கு உதவியாக நடைபெறும் கூட்டமொன்றின்போது, அக்கூட்டம் நடைபெற ஏழு (07) நாட்களுக்கு முன்பிருந்தே கூட்டம் நடைபெறும் இடம், நேரம், காலம், பேச்சாளர்களின் பட்டியல், வேட்பாளர்களின் பெயர்கள் முதலிய விபரங்கள் மாத்திரம் அடங்கிய சுவரொட்டியொன்றை குறித்த உள்ளூர் அதிகார சபை இடப்பரப்பில் மாத்திரம் வெளிக்காட்டி வைத்திருக்க அனுமதியுண்டு.

5. கூட்டம் நடைபெறும் நாள் அக்கூட்டம் நடைபெறும் இடத்தில் மாத்திரம் சட்டரீதியாக தயாரிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள், சித்திரங்கள், நிழற்படங்கள் முதலியவற்றை வெளிக்காட்டி வைத்திருக்க முடியுமென்பதோடு, கூட்டமொன்று நடைபெறும்போது கூட்டம் நடைபெறும் வளவினுள் மாத்திரம் சோடினைகளைச் செய்ய இடமளிக்கப்படலாம். அதேபோல் திறந்தவெளி இடமொன்றாயின், மேடையைச் சூழவுள்ள பகுதிகளை மாத்திரம் சோடினைகளைச் செய்ய இடமளிக்கப்படும் என்பதோடு கூட்டம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் அப்பிரதேசத்தின் நெடுஞ்சாலைகளிலும் சுற்றுவட்டங்களிலும் சந்திகளிலும் கொடிகளையும் பதாகைகளையும் பிரச்சாரப் பலகைகளையும் வெளிக்காட்டி வைத்திருத்தலாகாது. அதேபோல், கூட்டம் நடைபெறும் வளவினுள் மாத்திரம் ஒலிபெருக்கிகளைப் பொருத்த வேண்டுமென்பதுடன், அதன் ஓசை கூட்டங்கள் நடைபெறும் வளவுக்கு வெளியே எழாதவாறு கூட்டங்கள் நடைபெறும் வளவுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

6. மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் அனுமதி பெறப்பட்ட வேட்பாளரின் வாகனத்தில் மாத்திரம் வேட்பாளரின் பிரச்சார சுவரொட்டிகளை, கொடிகளை அல்லது பதாகைகளை வெளிக்காட்டி வைத்திருக்க அனுமதி அளிக்கப்படுவதோடு, வேட்பாளரொருவர் பயணிக்காத வாகனமொன்றில் தேர்தல் சம்பந்தமான துண்டுப்பிரசுரங்கள், விளம்பரத்தாள்கள், சித்திரங்கள், வேட்பாளர்களின் நிழற்படங்கள், சின்னங்களை வெளிக்காட்டி வைத்திருக்க முடியாது. வேட்பாளரொருவரை அழைத்துச்செல்ல இடமிருப்பதாகக் கருதி பெரும் எண்ணிக்கையான வாகனங்களில் இவ்வாறு கொடிகள் அல்லது பதாகைகளை வெளிக்காட்டி வைத்திருக்க முடியாது. பொதுமக்கள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள புகையிரதம், இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து வண்டிகள் அல்லது தனியார் பேருந்து வண்டிகளில் அல்லது வேறு தனியார் வாகனங்களில் இவ்வாறானவற்றை வெளிக்காட்டி வைத்திருத்தலாகாது.

7. பிரச்சார நடவடிக்கைகளின் போது வாகனப் பேரணிகளை நடத்த முடியாது. (தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறித்துரைக்கப்படாத போதும் வாகனப் பேரணி ஒன்றென்பது பொதுமக்களுக்கு இடைஞ்சலானதாக அமையும் விதத்தில் கட்சி/வேட்பாளர்/அரசியல் ஊக்குவிப்பொன்றை ஏற்படுத்தி ஐந்து வாகனங்கள் அல்லது அதற்குக் கூடுதலான எண்ணிக்கையில் ஒன்றன் பின் ஒன்றாக பயணிக்கின்றதாக கருதப்படும்.)

**அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களின் பிரச்சார நடவடிக்கைகள்**

1. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலக வளவொன்றின் எல்லையினுள் மாத்திரம், கட்சிப் பெயரையும் சின்னத்தையும்/சுயேச்சைக் குழுவின் இலக்கத்தையும் சின்னத்தையும் தேவைப்படின் எல்லா வேட்பாளர்களின் உருவம் தாங்கிய ஒரு காட்சிப் பலகையையும் காட்சிப்படுத்த வாய்ப்பளிக்கப்படுவதோடு, இவை 60 சதுர அடியைத் தாண்டாதிருக்க வேண்டும். மத்திய

அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகத்தில் மாத்திரம் கட்சியின்/குழுவின் தலைவரின் புகைப்படம் இக்காட்சிப் பலகையில் உட்சேர்க்கப்படலாம். மேலும் அலுவலகத்தின் உட்புறத்தில் 06 கொடிகளைக் காட்சிப்படுத்த வாய்ப்புண்டு. இது தவிர வேறெந்த சோடினைகளையும் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. ஒருபோதும் நெடுஞ்சாலைகளின் ஊடாக, நெடுஞ்சாலைகளின் மீது, நடைபாதையில், மின் விளக்குக் கம்பங்களின் நடைபாதைகள், எல்லை மதிற்சுவர்கள் முதலியவற்றில் எவ்விதமாக விளம்பரங்கள், பெரிய அளவிலான உருவப்படங்கள், கொடிகள், பதாகைகளை வெளிக்காட்டி வைத்திருக்க முடியாது. முன்பு கூறிய உடன்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அனுமதியை முறைகேடான விதத்தில் பயன்படுத்தும் முயற்சிகளின் போது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி அவ்வாறு எந்தவோர் இடத்திலும் விளம்பரங்களையும் பிரச்சாரப் பலகைகளையும் காட்சிப்படுத்த முடியாதென்ற கட்டளை அமுல்படுத்தப்படுகிறது.

2. குறித்த கட்சியின்/குழுவின் வேட்பாளரொருவர் அல்லாத வேறெந்த அரசியல்வாதி ஒருவரின் அல்லது வேட்பாளர் ஒருவரின் நிழற்படங்கள், தேர்தல் சின்னங்கள், தனிவேறான ஊக்கொலிகள் முதலான எவற்றையும் அலுவலகமொன்றில் வெளிக்காட்டி வைத்திருக்க முடியாது.

3. எந்தவோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகத்திலும் தேசியக் கொடி, மதக் கொடிகள், மத அடையாளங்கள் என்பவற்றை வெளிக்காட்டி வைத்திருத்தலாகாது.

4. அதேபோல் ஒவ்வோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகத்திலும் வெளிக்காட்டி வைத்திருக்கப்படும் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பிற்கான பலகைகளும் கொடிகளும் பதாகைகளும் நிழற்படங்களும் தேர்தல் நடைபெறும் தினத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் அகற்றப்பட வேண்டும். இருப்பினும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகத்திலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட வட்டார அலுவலகங்களிலும் அந்த அலுவலகத்தைப் பெயரிட்டு அழைப்பதற்கான பெயர்ப்பலகையை மாத்திரம் வெளிக்காட்டி வைத்திருக்கலாம். யாதேனுமொரு விதத்தில் அந்த அலுவலகங்கள் வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து 500 மீட்டர் தொலைவினுள் அமைந்திருப்பின், அந்த அலுவலகம் அகற்றப்பட வேண்டும்.

5. வேட்பாளரெருவர் வசிக்கின்ற வீட்டை அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகமொன்றாக நடத்திச் செல்லும் போது அந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகமும் இதில் குறிப்பிடப்பட்ட வரம்புகளின் கீழ் அலங்கரிக்கப்படலாம்.

6. அதேபோல் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களாக பயன்படுத்த அனுமதி பெறப்பட்ட தற்காலிக கொட்டகைகளுக்கு அவ்வாறு அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகமொன்றாக நடத்திச் செல்ல அனுமதி பெற்றுக்கொண்ட அரசியல் கட்சி/குழு அல்லது முகவரினால் 24 மணி நேரம் பூராவும் அந்த தற்காலிக கொட்டில்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பது அத்தியாவசியமாகும்.

7. எந்தவோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகத்திலும் நாட்டின் பொதுவான சட்டங்களும் தேர்தல் சட்டங்களும் மீறப்படலாகாது.

2034/37 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய வர்த்தமானியின்படி அரசியல், சமூக, மத, தேசிய, கலாசார அல்லது வேறு ஏதேனும் வைபவங்கள் அல்லது சந்தர்ப்பங்களுக்கு அனைத்து விதமான பொலித்தீன் வகை சோடினைகளைப் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்குறிப்பிட்டவாறு சட்டரீதியாக தயாரிக்கப்படும் துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள், சித்திரங்கள், நிழற்படங்கள், கொடிகள், பதாகைகள், பிரச்சாரப் பலகைகள், வில் வளைவுகள் முதலியவற்றை பொலித்தீனை பயன்படுத்தாமல் தயாரிக்க வேண்டும். பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களிலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களிலும் சோடினைகளும் அனைத்து விதத்திலும் சட்டரீதியாக பிரச்சார நடவடிக்கைகளிலும் பொலித்தீன் பாவனையை தவிர்ந்துகொள்ள வேண்டும்.

EOG - 03- 0186

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.